**சமூக பாதுகாப்பு சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சமூக பாதுகாப்பு சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சமட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள நடைமுறையல்லாத சொத்துக்களான ரூபா 787,540 | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் சொத்து மீள்மதிப்பீடு செய்யப்படாததால் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. 2021 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான தொடர்பாடல் உபகரணங்கள், ரூபா 10,096,197 தொகையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், ரூபா 23,063,419 தொகையான கணனி உபபாகங்கள், ரூபா 9,932,023 தொகையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்திற்கான மதிப்பிடப்பட்ட பிழை திருத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையால் ஏற்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய முடியவில்லை. 2022 ஆம் ஆண்டில், தொடர்புடைய சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய ஏற்பாடு செய்யப்படும். | |
| (ஆ) | ஓய்வூதியத் திட்டத்திற்கான புதிய கணனி மென்பொருள் முறைமையை நிறுவுவதற்கான ஒப்பந்தத்திற்காக 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 1,090,250 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மென்பொருள் முறைமை நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், இந்த கணனி முறைமையின் கிரயத்தை நடைமுறை வேலையாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இற்கு முரணாக இது நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணனி மென்பொருளாகக் கணக்கீடு செய்யப்பட்டதுடன் 2019 முதல் வருடாந்தம் 25 சதவீதத்தில் பெறுமானத்தேய்விடப்பட்டது. இதனால் சபையின் நடைமுறையல்லாத சொத்துக்கள் மேற்படி தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களில் திரண்ட பற்றாக்குறை ரூபா 783,337 ஆல் அதிகரித்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இந்தக் கொடுப்பனவு நடைமுறையல்லாத சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட்டு, ஆண்டொன்றிற்கு 25 சதவீதத்தில் பெறுமானத்தேய்விடப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயலற்ற உறுப்பினர்களை செயற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 2.2 மில்லியன் அரசாங்க ஒதுக்கீட்டில் ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் அங்கத்தவர்களாக இருந்த உறுப்பினர்களில் செயலற்ற உறுப்பினர்களை அறிவிப்பதற்காக ரூபா 1,422,576 தொகை செலவிடப்பட்டுள்ளது. செயற்பாட்டுச் செலவினங்கள் செலவினங்களாக பதிவழிக்கப்படுவதற்குப் பதிலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டன. இதன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான சொத்துக்கள் மற்றும் செயற்பாட்டு மிகை நிதிக்கூற்றுக்களில் அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டன. | இந்த செலவினங்களின் எதிர்பார்க்கப்படும் நலன்கள் 10 வருடங்களில் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாலும், ஒரு வருடத்திற்கான உரிய செலவினம் மாத்திரமே செலவினமொன்றாக பதிவழிக்கப்பட்டிருந்ததாலும் இந்த ரூபா 1.42 மில்லியன் ஏனைய மூலதனச் செலவினமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | செயற்பாட்டு செலவினம் மூலதனமாக்கப்படாமல் பொறுப்புச் செலவினமொன்றாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 ஆம் ஆண்டு முதல் மிளாய்வாண்டு வரை ஓய்வூதியத் திட்டங்களின் உறுப்பினர்களால் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 5,757,980 தவணைப்பணத் தொகையானது உறுப்பினர்களின் அடையாளத்தை இனங்கண்டு உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளில் அவற்றைக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் ஏனைய பொறுப்புக்களின் கீழ் இனங்காணப்படாத வைப்புக்களாக காட்டப்பட்டது. எனவே, மீளாய்வாண்டில், நிதிக்கூற்றுக்களில் மேற்படி தொகையால் ஏனைய பொறுப்புக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | இது நீண்டகாலப் பிரச்சனையொன்றாகும், பங்களிப்பாளர்கள் வங்கிகளில் பணம் செலுத்தும் போது தேவையான தகவல்களை வழங்காததால், பங்களிப்பாளர்களை இனங்காண முடியாத நிலையில் தற்காலிகமாக இனங்காணப்படாத வைப்புக்களாக கணக்கீடு செய்யப்படுகின்றன. இந்த பெறுமதியை 2022 ஆம் ஆண்டில் ரூபா 3 மில்லியன் வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த பெறுமதி உடனடியாக இனங்காணப்படும். | ஓய்வூதியத் திட்டங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்த உறுப்பினர்கள் செலுத்தும் பங்களிப்புகளை அந்தந்த உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் இனங்காணப்படாத வைப்பு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனா ன தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபைச் சட்டம் 15(2) ஆம் பிரிவு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நலன்கள் இழக்கப்படும் போது பங்களிப்பாளருக்கு சபை அறிவிக்க வேண்டிய போதிலும் ரூபா 672,733 தொகையான செயலற்ற பங்களிப்பாளர்களுக்கு நலன்கள் இழக்கப்பட்டிருந்தமை தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 2015 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் செயலற்ற பங்களிப்பாளர்களை இனங்காண முடியவில்லை. | உறுப்பினர்களின் தகவல்களை சேகரிக்கும் கணனி மென்பொருள் சரியாக செயற்படாததால், செயலற்ற உறுப்பினர்கள் குறித்த சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை, புதிய கணனி மென்பொருள் முறைமை நிறுவப்பட்டு வருகிறது, அதன் பின்னர் செயலற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவித்தல்கள் வழங்கப்படும பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் நலன் திட்டங்களில் உள்ள செயலற்ற பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 345,832 ஆகும், 40,628 செயலற்ற பங்களிப்பாளர்களிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் புதிய செயற்திட்டத்தின் கீழ் அனைத்து செயலற்ற பங்களிப்பாளர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்படும். | இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயலற்ற, அவர்களது நலன்களை இழந்த உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு ஓய்வூதிய நலன்களின் இழப்பை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 15,106,709 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 12,041,238 ஆக காணப்பட்டமைய ால் நிதி விளைவுகளில் ரூபா 3,065,471 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அரசாங்க மானியங்கள் ரூபா 3,507,444 ஆலும் சம்பளம், வழங்கல்கள் மற்றும் சேவைகள், ஒப்பந்த சேவைகள் மற்றும் பராமரிப்பு போன்ற செலவினங்கள் ரூபா 5,984,725 ஆலும் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இல. 18, ராஜகிரிய வீதி, ராஜகிரியவில் உள்ள கட்டிடம் 2013 ஆம் ஆண்டில் சபையின் தலைமை அலுவலகத்தை பேணுவதற்காக சபையின் நிதியிலிருந்து ரூபா 195 மில்லியன் தொகையை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டது. பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றாமல், அரசாங்கத்தின் மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 165 மில்லியனை விட அதிக விலைக்கு ஆதனங்களை கொள்வனவு செய்ததால் சபைக்கு ரூபா 30 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. இது நிதி முறைகேடு அல்ல என்பதும் 09 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதற்கு காரணமான தரப்பினருக்கு எதிராக நட்டத்தை ஈடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் கணக்காய்வின் போது நிராகரிக்க முடியாது. | அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் அமைச்சின் மேலதிக செயலாளரின் கீழ் விசாரணை நடைபெற்று வருகிறதுடன் விசாரணையின் பரிந்துரைகளின் பிரகாரம் மேலதிகக் கொடுப்பனவிற்கு பொறுப்பான நபர்கள் கண்டறியப்பட்டு, மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பட்டுள்ள நட்டம் குறித்து சபை நடவடிக்கை எடுத்து, குறித்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் உறுப்பினர்களாக இருந்த 882,665 உறுப்பினர்களில், 672,733 செயலற்ற உறுப்பினர்கள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டனர். ரூபா 2.2 மில்லியன் அரசாங்க ஒதுக்கீட்டிலிருந்து செயற்பாட்டச் செலவினங்களாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மற்றும் அஞ்சல் கட்டணங்கள் ஆகியவற்றிற்காக ரூபா 1,422,576 தொகை செலவிடப்பட்ட போதிலும், செயலற்ற உறுப்பினர்களிடமிருந்து 03 உறுப்பினர்களை மாத்திரமே செயற்படுத்த முடிந்தது. இதனால், இந் நிகழ்ச்சித்திட்டத்தை | செயலற்ற பங்களிப்பாளர்களை செயற்படுத்தும் செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டு வரை சமூகப் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது, 2022/09/01 முதல் பணிப்பாளர் சபையயின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சேகரிப்புப் பிரிவிடம் இது ஒப்படைக்கப்பட்டது, அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு எந்தத் தடையும் காணப்படாததுடன் ஒரு புதிய செயற்திட்ட திட்டம் மற்றும் ஒரு புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த செயற்திட்டம் மிகவும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | செயலற்ற பங்களிப்பாளர்களை செயற்படுத்துவதற்கு விரைவான மற்றும் வினைத்திறனான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

செயற்படுத்துவது நிறுத்தப்பட்டு, மீதமுள்ள ரூபா 777,424 ஒதுக்கீடு பயன்படுத்தப்பட முடியாதுள்ளது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சஹானா, திலின, இசுர, சரண, தனலக்ஷ்மி, சகெரும மற்றும் அரசாவ போன்ற 07 ஓய்வூதிய மற்றும் நலன் திட்டங்கள் 1996 மற்றும் 2013 க்கு இடையில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 05 திட்டங்களுக்கான உறுப்பினர்களை சேர்ப்பது 2012 செப்தெம்பரிலிருந்து இடைநிறுத்தப்பட்டது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பிற்காக 02 ஓய்வூதியத் திட்டங்கள் மாத்திரமே இருந்தன, மேலும் அந்த 02 திட்டங்களுக்கு 446,444 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் செயற்பாட்டில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 100,617 அல்லது 22 சதவீதம் மாத்திரமேயாகும். திட்டத்தின் கீழ் நலன்களை இழந்தவர்கள் மற்றும் தவணை செலுத்த தவறிய பங்களிப்பாளர்கள் பற்றிய தகவல்களை உரிய நேரத்தில் அவதானிக்காததால், செயலற்ற பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், அது குறித்து அந்த மக்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. தவணைப்பணம் செலுத்த தவறியவர்கள் குறித்து பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தால், தவணை தவறியவர்களை தடுக்க முடிந்திருக்கும். ஆனால் செயலற்ற பங்களிப்பாளர்கள் | இந்த 436,221 உறுப்பினர்களில், 375,213 பேர் சஹானா மற்றும் திலின திட்டங்களில் உறுப்பினர்களாக உள்ளனர், அவற்றிற்காக அரசாங்கத்தின் பங்களிப்பை எதிர்பார்த்து முக்கிய மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன, குறித்த திட்டங்களுக்கு அரசாங்கத்தின் நிதி பங்களிப்பை திருப்பிச் செலுத்தாததால் 2012 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 1/2012 சுற்றறிக்கை குறித்த திட்டங்களுக்கு உறுப்பினர்களை சேர்த்தல் மற்றும் செயற்படுத்துதலை இடைநிறுத்தியது, மேலும், சுரகும மற்றும் அரசவ செயற்திட்டங்களின் தொடக்கத்தில் இருந்து, 2021 ஆம் ஆண்டு வரை செயலற்ற உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த பங்களிப்பாளர்களை செயற்படுத்துவதற்கு புதிய செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இப்போது உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, செயலற்ற அறிவிப்புகள் தபாலில் அனுப்பப்பட்டு, செயல்படுத்தும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் தற்போதுள்ள கணனி தரவு முறைமை மூலம் தேவையான தகவல்களை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், புதிய கணனி முறைமையை அறிமுகப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டு, அதற்கேற்ப பங்களிப்பாளர்களின் செயலற்ற நிலைமை குறித்து தெரிவிக்க | உறுப்பினரை சேர்த்தக்கொள்ளலை வினைத்திறனாக மேற்கொள்ளவும் தவணைப்பணம் செலுத்துவதைத் தவிர்ப்பதால் நலன்களைத் தவறவிட்ட உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தவும், உறுப்பினர்கள் செயலிழப்பதைத் தடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரித்ததற்கு நடவடிக்கை இல்லாதமையே முக்கிய காரணமாக இருந்தது. | முடியும். | |
| (ஆ) | அங்கத்துவம் செயலற்றதாக உள்ள அல்லது உறுப்புரிமையை இரத்து செய்வது தொடர்பாக 25 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட தவணைப்பணங்களை செலுத்திய உறுப்பினர்கள் 2016 முதல் மீளாய்வாண்டு வரை செலுத்தப்பட்ட தவணைப்பணங்களில் இருந்து ரூபா 180.7 மில்லியன் தொகையை அறவிடுவது அவதானிக்கப்பட்டது. அந்த பங்களிப்பாளர்களின் தொடர்ச்சியான பங்களிப்பிற்கான ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | அரசாங்க பங்களிப்பு கிடைக்காததால், சஹானா மற்றும் திலின திட்டங்களில் செயலற்ற உறுப்பினர்களை செயற்படுத்தாமல், உறுப்பினர்களின் கோரிக்கையின் பேரில், தேறிய பங்களிப்புக்கள் செலுத்தப்பட்டு, செயலற்ற உறுப்பினர்கள் ஏனைய திட்டங்களுக்கு பங்களிக்கலாம். மேலும் குடும்ப உறுப்பினர்கள் ஒரு திட்டத்தின் உறுப்பினர்களாக உள்ளதுடன் கணக்கு மீதி மாற்றப்பட்டது, மேலும் உடன்படாத உறுப்பினர்களுக்குத் மீளளிக்கப்பட்டதுடன் அரசாங்க வேலையின் காரணமாக திட்டத்தில் சேர்வதற்கான தகுதியை இழந்ததால் தேறிய பங்களிப்புக்கள் மீளளிக்கப்பட்டன. | திட்டங்களில் இருந்து உறுப்பினர்கள் செலுத்தும் தவணைப்பணத்தை மீளப்பெறுவதைத் தடுப்பதற்கு திட்டமிடப்பட்ட பயனுள்ள திட்டங்களைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதிப் பங்களிப்பின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கலைஞர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்திற்காக ரூபா 94 மில்லியன் தொகையை கலாச்சார அலுவல்கள் அமைச்சு வழங்கியிருந்தது. இந்தத் தொகை வங்கி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிய மீதி ரூபா 104.97 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. ஆனால் 2017-2021 ஆம் ஆண்டில் ஓய்வூதியத் திட்டத்தில் 234 கலைஞர்கள் மாத்திரமே பணிக்கமர்த்தப்பட்டனர். 142 கலைஞர்களின் அங்கத்துவம் செயலிழக்கச் செய்யப்பட்டதால், இத்திட்டத்தின் கீழ் செயலில் உள்ள உறுப்பினர்களின் | புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் பிரகாரம், கலாசார அலுவல்கள் திணைக்களம் கலைஞர்களைத் தெரிவுசெய்து, அந்த கலைஞர்களின் உரிய தவணைப்பணங்களுடன் சபைக்கு அவர்களை அனுப்பிவைத்தது. கலைஞர்களை செயற்படு நிலையில் வைத்திருப்பதற்காகவும், கலைஞர்களிடமிருந்து பெற வேண்டிய தவணைப்பணத்தை அறவிடுவதற்கும் கலாச்சார உத்தியோகத்தர்கள் பொறுப்பேற்கவில்லை, திணைக்களம் கலைஞர்களுக்கு ரூபா 50,000 நிலையான வைப்பொன்றை பேணுவதற்கு ரூபா 94 மில்லியன் வைப்பொன்றை வழங்கியிருந்தது. திணைக்களத்தால் இந்த சேவைகள் போதுமானதாக இல்லாததால், சபை செயற்பட்டு 372 கலைஞர்களுக்கு | ஓய்வூதியத் திட்டத்தில் கலைஞர்களைச் சேர்த்துக்கொள்வதை முறைப்படுத்தி, அனைத்து கலைஞர்களுக்கும் ஓய்வூதியத் திட்டத்தின் நலன்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எண்ணிக்கை 92 ஆக இருந்தது. இது மிகக் குறைந்த நிலையாகும். | உறுப்புரிமையை வழங்கியதுடன் கலைஞர்கள் செயற்படுத்தப்படுகிறார்கள். | |

### 3.4 செயற்திட்டம் அல்லது மூலதன வேலையில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முறைமையில் புதிய மென்பொருள் முறைமையை நிறுவுவதற்கு ரூபா 12,511,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இந்தக் கணனி முறைமையை நிறுவத் தவறியதால், சபையின் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களை முறையாகப் பேண முடியவில்லை. | கணனி முறைமையின் விரிவான மென்பொருள் தேவைப்பாட்டு விபரக்குறிப்புரை அறிக்கையின் (DSRS) அனைத்து பகுதிகளும் உள்ளடக்கப்படாததால், 2021 இல் திருத்தப்பட்ட விபரக்குறிப்புரை அறிக்கையின் (DSRS) அடிப்படையில் 2018 இல் வழங்குநருடன் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். வழங்குநர் ரூபா 1.1 மில்லியன் மேலதிக கிரய மதிப்பீட்டில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு இணங்கியிருந்ததுடன் ஒரு வருடத்திற்குள் முறைமையைபூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கிறார். | ஓய்வூதியத் திட்டங்களுக்கான புதிய மென்பொருள் முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கும், ஓய்வூதியத் திட்டங்களின் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதை பேணுவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் மிளாய்வாண்டில் கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 5,000,000 தொகையும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,800,000 தொகையும் ஒதுக்கப்பட்டது, ஆனால் பெறுகை நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் தாமதம் காரணமாக, ஒதுக்கீட்டில் முறையே 100 சதவீதம் மற்றும் 48 சதவீதம் எஞ்சியிருந்தது. | கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 5,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,000,000 மாத்திரமே பெறப்பட்டிருந்தது. அதற்கான கூறுவிலைகள் கோரப்பட்ட போதிலும், வழங்கப்பட்ட விலைகள் மிகவும் அதிகமாக இருந்ததால், மீண்டும் 02 பகுதிகளின் கீழ் கூறுவிலைகளை கோர வேண்டியிருந்தது, பெறுகை நிறைவேற்றப்பட்டு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான கட்டளைகள் அனுப்பப்பட்ட போதிலும், வழங்குநர்கள் விலைவாசி உயர்வு காரணமாக பொருட்களை வழங்க மறுத்துவிட்டனர். மேலும் விலைகள் தற்போதுள்ள ஒதுக்கீட்டு வரம்புகளுக்குள் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளன. | பெறுகை திட்டத்தின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் வினைத்திறனாக செயற்படுத்தப்பட்டு, பெறுகைகளை குறித்த நேரத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |